## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 43/2021 | Date : 25.08.2023 | PW1 |
|---|---|---|
| Name: நூாரூல்கஹுதா | W/o. அசரப் அலி | |
| Evidence Recorded Time: 12.21 P.M. to 12.35 P.M. | | |

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் கேள்விப்பட்டதைதான் காவல் நிலையத்தில் புகாராக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் TVS XL TN 93 D 4017 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருந்த போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, ஓட்டுநர் உரிமம் இருந்தது, விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் அமலில் இல்லை என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் 01.07.2019-ல் முடிவடைந்துவிட்டது, அதற்கு பின்னர் புதுப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவும் ஆஜாக்கரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் மனுவில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் கணவர் தமிழ்கவி என்ற பெயரில் மளிகை கடை நடத்தியதற்கும், மாதம் ரூ.50,000/- வருமானம் வந்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாதம் ரூ.50000/- வருமானம் வந்தற்கான வங்கி கணக்கு விவரங்கள், வருமான வரி அட்டை, வரிமான வரி கட்டியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மளிகை கடை நடத்தியதற்கு தொழில் வரி, பஞ்சாயத்திற்கு செலுத்திய வரி ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இழப்பீடு அதிகமாக பெறவேண்டும் என்ற எண்ணத்தில் என் கணவரின் வருமானத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பீடு அதிகமாக பெறவேண்டும் என்ற எண்ணத்தில் மனுவிலும், பிரமாண பத்திரத்திலும் சங்கதிகளை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் மனுதாரர்என்னுடைய மகள்,

அவருக்கு திருமணம் ஆகவில்லை. மேற்படி 2ம் மனுதாரர் என்னுடைய கணவரின் வருமானத்தை சார்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வசிப்பதற்கு குடும்ப அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். போலீசார் தாக்கல் செய்த குற்றபத்திரிக்கையின் நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை, வாரிசு சான்று, இறப்பு சான்று ஆகியவற்றின் நகல்களை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். விபத்து சம்மந்தமாக போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் என் கணவருக்கு தலையில் அடிபட்டு சம்பவ இடத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என கணவருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், தலைக்கவசம் அணியாமலும் வாகனத்தை ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரருக்கு  ஓட்டுநர் உரிமம் இல்லாததால் பாலிசி விதிகள் மீறப்பட்டுள்ளதால் 3-ம் எதிர்மனுதாரர் எந்த நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

ஓம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.